1971 ஜூலை 1]

வடாற்காடு மாவட்டத்தில் புது சர்க்கரை ஆலைகள்.

*99 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் நிறுவப்படவிருக்கும் இரண்டு சர்க்கரை ஆலைகளையும் வெவ்வேறு வட்டத்தில் நிறுவும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த வட்டங்களில் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இடம் தெரிந்தெடுக்கும் குழு, வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவ வடாற்காடு மாவட்டம் குடியாத்தம் வட்டம் அம்முண்டி கிராமத்தில் உள்ள திருவலம் என்ற இடத்தையும், திருப்பத்தூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை நிறுவ வடாற்காடு மாவட்டம் வாணியம்பாடி வட்டம் கேதண்டபட்டி என்ற இடத்தையும் தேர்ந்தெடுத்துள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : அமைச்சரவர்கள் இரண்டு இடங்கள் குறிப்பிட்டார்கள். இந்த இடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு வாலாஜாவில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கவேண்டும் என்று முதன்முதலில் முடிவு செய்யப்பட்டிருந்ததா ? அதற்குப் பிறகு இந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீண்ட நாட்களுக்கு முன்னால் எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கலாம் என்று அறிக்கை தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி வடாற்காடு மாவட்டத்தில் குடியாத்தத்திற்குப் பக்கத்தில் பிரம்மபுரம் என்ற இடத்தில் இப்படிப்பட்ட ஒரு தொழிற்சாலை அமைக்கலாம் என்ற முடிவை அவர்கள் எடுத்திருந்தார்கள். திருப்பத்தூர் தாலுக்காவில் ஆம்பலூர் என்ற இடத்தையும் தேர்ந்தெடுத்திருந்தார்கள். ஆனால், அனுமதி வந்ததற்குப் பின்னர் அந்த இடங்களை மறுபரிசீலனை செய்து, ரொம்பதூரம் தள்ளிவிடாமல்—பக்கத்திலேயே—அந்த மாவட்டத்திலேயே இருக்கவேண்டுமென்று இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள்.

திரு. எஸ். முருகையன் : இந்த இரண்டு ஆலைகளுக்கும் இதுவரையில் எவ்வளவு பங்குத்தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது ? அவை எப்பொழுது வேலை செய்யத் துவங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : விவரங்களை வெளியிட்டால், மாண்புமிகு உறுப்பினர் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நன்றாக ஒத்துழைக்க வில்லையோ என்ற சந்தேகம் ஏற்பட்டுவிடும். ஆகவேதான் மிகக்குறைவாக வசூலிக்கப்பட்டிருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளுகிறேன். கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் உருவாவதற்கு ஏராளமாகப் பணம் வசூலித்துக்கொடுக்க வேண்டுமென்று சட்டமன்ற உறுப்பினர்களை இந்தச் சந்தர்ப்

பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட முயற்சி எடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : குறிப்பிட்ட இடங்களில் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருந்தால், அந்த மாவட்டத்திலேயே வேறுபகுதி களில் பங்குத்தொகை அதிகமாக வசூலிக்கப்பட்டால் அந்த இடங் களுக்கு, குறிப்பாக வந்தவாசி போன்ற தாலுக்காக்களில் வசூலித்துத்தருகிறார்கள் என்றால் அங்கே மாற்றித்தருவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பங்குத் தொகையை மட்டும் நாம் கணக்கிட முடியாது. குறைந்தபட்சம் 5,000 முதல் 8,000 ஏக்கர் வரை பரப்புள்ள கரும்பு பயிரிட வாய்ப்புள்ள இடமாக இருக்க வேண்டும். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு 'ஏரியா' என்று நிர்ணயிக்கிறோம். அதிலே நல்ல பொருத்தமான இடத்தை நாம் தேர்ந்தெடுக்கிறோம். அந்தப் பகுதியில் தொழிற்சாலை இருந்தால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அக்கறை ஏற்படும், அவர்கள் தொடர்ந்து கரும்பு பயிரிட்டு சர்க்கரை ஆலைக்குக் கொடுக்கவும் வாய்ப்பு இருக்கும் என்று அரசாங்கம் கருதுகிறது. அந்தப் பகுதியில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களும் மற்ற வர்களும் இதற்கு முன்வரவேண்டும்.

பேரூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை.

* 100 வினா—திரு. என் மருதாசலம், திரு. சு. துரைசாமி, } மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை மாவட்டம், பேரூரில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோவை—மேட்டுப்பாளையம் சாலையில் அவினாசி வட்டத்திலுள்ள காரமடையில் நிறுவ முடிவு செய்யப்பட்டது.

திரு. என். மருதாசலம் : கோவை மாவட்டத்தில் பேரூரில் பெரும்பாலும் கரும்பு சாகுபடி செய்யக்கூடிய இடங்கள் இருக் கின்றன. அந்த இடத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலில் அறிக்கை தயாரித்தபோது பேரூரில்தான் ஏற்படுத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், மறுபரிசீலனை செய்ததில், முக்கியமாகத் தண்ணீர் தேவைப்படுகிற காரணத்தால், போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்கவேண்டுமானால் பவானி ஆற்றுக்குப் பக்கத்தில் உருவாக்கலாம் என்று, இரண்டு இடங்களைப் பார்க்கும்போது, ஓரிடம் காரமடையில் வைக்கலாம் என்று கருதப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் வேறு இடத்தில் வைக்கலாம்